2. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் எதுவும் இன்றைக்கு எடுத்துக் கொள்ளவேண்டாம் என அலுவல் ஆய்வு குழுவில் முடிவு எடுக்கப்பெற்றிருக்கிறது. இன்றைக்கு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்தான் தொடர்கிறது.

3. வரவு-செலவுத் திட்டம், 1980-81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் —தொடர்ச்சி.

)இ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப்பணிகள் —தொடர்ச்சி.

(உ) கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள், கட்டிடங்கள் —தொடர்ச்சி.

(ஊ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் —தொடர்ச்சி.

(எ) கோரிக்கை எண் 51—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு, இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்ற குற்றச்சாட்டை அடிக்கடி நாம் கேட்டு வருகிறோம். சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து விட்டதற்காக எடுத்த எடுப்பில் அரசாங்கத்தையும்,